RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s1990

# புறநானூற்றில் அறக்கோட்பாடுகள்

**ந. கல்யாணி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Purananuru

**N. Kalyani** [a, *]

[a] Research Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women, Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: kalyanipazhani@yahoo.com

Received: 08-08-2022
Revised: 20-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

This research is in the task of establishing the high quality of the human being, which needs to be corrected when the individual morality deviates from the normal state. The kings lived with fame by giving a proper explanation to fame and disrespect. Society puts forth certain moral principles that must be followed by human beings to lead a happiest life. Although there is a lot of internal literature that reflects the internal life, the external life, moral philosophies and high values with cultural symbols are recorded in the external literature of Purananuru. Many moral ideas followed in society are recorded and extolled in Purananuru. There are many moral ideals of the ancient Tamils in Purananuru which praise and protects the social virtues, which reflect life in the individual dimensions of social needs. This is explained here in a comparative manner through the song of Thirukkural.

**Keywords:** Purananuru, Human, Literature, Moral Ideas

## முன்னுரை

சமூகத்தின் கட்டுப்பாடற்ற மனிதவாழ்வில் மனிதனைச் சீரமைப்பதற்காகவும், ஒழுங்குப்படுத்திக் கொள்ளவும் சிந்தனையின் வழியிலான சில வரன்முறைகளை அச்சமூகம் வரையறுத்துக் கொண்டு தன் வாழ்வை மேம்படுத்திக் கொண்டது. இதனை புறநானூற்று வாயிலாக திருக்குறளின் பாடல் வழியாக ஒப்பீட்டு வகையில் இங்கு விளக்கப்படுகின்றன.

சங்ககாலத்தின் வரலாற்றுப் பெட்டகமாகவும், வாழ்வியல் களஞ்சியமாகவும் போற்றிப் பாதுகாக்கப்படுவது புறநானூறு என்னும் இலக்கியமாகும். மனித வரலாற்றை அறிய, மொழி, கல்வெட்டு, தொல்பொருள் ஆராய்ச்சி என்று ஒவ்வொரு துறையும் தமது தேவையை நிறைவு செய்கின்ற நேரத்தில் சங்கச் சமூகத்தின், வாழ்வாதாரங்களைப் பிரதிபலிக்கும் இலக்கியச் சான்றாக புறநானூறு மிளிர்கின்றது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அகவாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற அக இலக்கியங்கள் மிகுந்திருப்பினும், புற வாழ்வியலை, அறநெறித் தத்துவங்களையும், பண்பாட்டு அடையாளங்களோடு கூடிய உயர் பண்புநெறிகளையும் அடுத்த சமூகத்திற்குக் கடத்துவதில் வரலாற்று பண்பாட்டு ஆய்வில் தன்னை இன்றளவும் புறநானூறு உட்படுத்திக் கொண்டுள்ளது. சமூகத் தேவையான தனிமனித ஒழுக்கம் புறநானூற்றில் போற்றி பாதுகாக்கப்படுகின்றது. இவ்வொழுக்கத்தின் வீச்சுகளில் வாழ்க்கைப் பிரதிபலிப்பு நீண்ட ஆழ அகலங்களைக் கொண்டது. சமூக அறத்தைப் போற்றிப் பாதுகாக்கும் புறநானூற்றில் ஏராளமான பண்டைய தமிழரின் அறக்கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

## ஒழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவரின் வாக்கு (Subbu Reddyar, 2010). ஒருவரின் ஒழுக்கப்பண்பு, அவனுக்கு மேன்மையையும், சிறப்பையும் தருவதால் ஒழுக்கத்தை உயிருக்கு மேலாகக் கருதி பாதுகாக்க வேண்டுமென்பது வள்ளுவரின் வாழ்நெறி கொள்கையாகும். இந்த ஒழுக்கம் தனிமனித வாழ்வில் கடைப்பிடிக்கும் பொழுது வாழ்வு இன்னும் மேம்பாடு அடையும். ஓர் ஆடவனின் உழைப்பும், முயற்சியும் சமூகத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. குடும்பமாகிலும், சமூகமாகிலும், நாடாகிலும், ஆடவனின் உயரிய சிந்தனையால் வழி நடத்தப்படுவதால், சமூகத்தில் ஆடவனின் ஒழுக்கம் போற்றப்பட்டது. ஆடவர்கள் நல்லவர்களாகவும் ஒழுக்க வாழ்வைக் கடைப்பிடிப்பவர்களாகவும் உள்ள நாடே வளம் செழிக்கக் கூடியதாகவும், உயர்த்திப் பேசக் கூடியதாகவும் அமையும். இந்த ஒழுக்க நிலையின் மேன்மையைப் புறநானூற்றில் ஔவையார்,

"நாடா கொன்றோ! காடா கொன்றோ!

அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!

எவ்வழி நல்லவர் ஆடவர்,

அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று குறிப்பிடுகின்றார் (Manickavasagam, 2014). நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், மேடாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும் அங்கு வழிநடத்திச் செல்லும் ஆடவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் ஔவை. உயர்ந்த பண்பையும், ஒழுக்க நெறிகளையும் கொண்ட ஆடவனின் ஆளுமைத்திறன், பண்படாத சமூகமாக இருந்தாலும் பக்குவப்பட்ட சமூகமாக மாற்ற முடியும் என்பது உட்கருத்து ஆகும்.

சிறந்த பண்புநெறிகளே மனிதர்களை நல்லவர்களாகவும், சமூகப் பொறுப்பானவர்களாகவும் அடையாளப்படுத்துகின்றது. மன்னர்களின் அரசாட்சியில் தவறு நேர்கின்ற போதும், தவறு ஏற்படக்கூடாது என எதிர்நோக்கும் போதும் சில ஒழுக்கப் பண்பு மன்னருக்கு அறிவுறுத்தி வழிகாட்டப்பட்டன. அவர்களிடம் மனித மாண்புகளை உணர்த்தி, உயர் பண்புநெறிகளை மேம்படுத்தி அறிவுரை கூறுவது இயல்பாகவே இருந்தது. இந்த அற ஒழுக்கங்களே அரசனைச் செம்மையான வழியிலும், செங்கோண்மை தவறாமலும் கொண்டு சென்றது. மிகை உணவு கொள்ளாது குறைந்த சினம் கொள்ளுதல், குறைவாகச் சொல்லி மிகுதியாகக் கேட்டல், கருணை உள்ளத்தோடு கொடை அளித்தல். தாளிப்போடு கூடிய துவையல் உணவைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்தல். எல்லோருடனும் பணிவு கொள்ளுதல், என இச்செயல்களே மன்னனின் ஒழுக்கப் பண்புகளாக நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் குறை ஏற்படுமாயின் அவற்றை நெறிப்படுத்துவதில் புலவர்கள் முனைப்பாக இருந்தனர். இதுபோன்று ஒழுக்கப்பண்பை கடைப்பிடிக்கவில்லையாயின் ஏற்படும் குறைகளைச் சங்க வருணன் என்னும் புலவர் தந்துமாறன் என்னும் மன்னனுக்குக் கூறுவதாகக் கீழ்காணும் பாடல் அமைந்துள்ளது.

"அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது:

இன்னும் அற்று அதன் பண்பே அதனால்

நிச்சமும் ஒழுக்கமும் முட்டிலை பரிசில்

நச்சுவர் கையின் நிரப்பல் ஓம்பு மதி"

இந்தப் பண்புநெறிகளை அறியாதவர்களின் செல்வம் நிலையாமையால் செல்வதோடு பொருளற்றதாகிப் போகும். அதனால் ஒழுக்கநிலை தவறாது நின்னிடம் பரிசு வேண்டி வருபவருக்குக் குறைவில்லாது பரிசுப்பொருள் கொடுத்து காப்பாயாக என்று மன்னனுக்கு நெறிப்படுத்தும் பண்பினால்

சமூகம் பெரும் பயனைப் பெறுகின்றது. மன்னராட்சியில் மன்னனே மக்களின் உச்சம் என்பதால் மன்னனின் ஒழுக்கநிலை சமூகத்திற்குப் பயனாகச் சென்றடைந்தது (Manickavasagam, 2014).

## அறம் வலியுறுத்தல்

"அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க மற்றது

பொன்றுங்கால் பொன்றாத் துணை"

என்று கூறுகிறது வள்ளுவம், அறம் செய்வதற்குக் காலம் நேரம் பார்க்க வேண்டியதில்லை என்பது தான் வள்ளுவரின் ஆழமான கருத்தாக இருந்திருக்கின்றது (Subbu Reddyar, 2010). இந்த அறம் தனிமனித வாழ்வில் பிரதிபலிக்கப்படுகின்றது. மனிதன் தோன்றிய நாள்கள் தொட்டே தனக்கான அறங்களை வகுத்துக் கொண்டு வாழக் கற்றுக் கொண்டான் என்பது இலக்கியங்கள் காட்டும் வரலாறாகும். சர்வ வல்லமையும், ஆதிக்க மனப்பான்மையும் கொண்டிருந்தாலும் அறநெறியைப் பின்பற்றி ஆட்சி நடத்துதல் வேண்டும் என்று மன்னனுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பதால், மக்களின் ஒழுக்கக் கோட்பாடுகளையும், அறக்கருத்துக்களையும் மன்னனின் வழியாக நெறிப்படுத்தினர். அறநெறியைப் போற்றி பாதுகாக்கும் பண்பினால் பிறரை மதிக்கும் பண்பும், நட்புணர்வும் மேலோங்கி, பகைவனுக்கும் அருளும் மனித உயர் பண்பு நெறிகள் வலுப்படுத்துகின்றன.

உயர்ந்தவன், தாழ்ந்தவன், நற்பண்புடையவன், தீயபண்புடையவன் என்னும் கருதுகோள்கள் சூழ்நிலையால் உருவாக்கப்படுபவை தற்காலிகத் தரநிலைகளைக் கண்டு மதிப்பிடும் மனப்போக்கு மன்னர்களிடம் இருந்ததால் அவற்றை நீக்கி அறத்தின் வழியாக நடுநிலைமையோடு நீதி கூறுவதே மன்னர்களின் செங்கோன்மையாகக் கருதப்பட்டது.

"நான்குடன் மாண்டு ஆயினும், மாண்ட

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

அதனால், நமர் எனக் கோல்கோடாது

பிறர் எனக் குணம் கொல்லாது"

என்று பறநானூறு குறிப்பிடுகின்றது (Manickavasagam, 2014). வலிமையான நான்கு படைகள் கொண்டு இருந்தாலும் அறநெறி வழியாகச் செயல்படுதலே நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும் என்று மருதன் இளநாகனார் குறிப்பிட்டுள்ளார்.

சூரியனைப் போல ஆண்மையும் ஆற்றலும், சந்திரனைப் போன்று தண்மையும் அருட்பாங்கும், கைமாறு கருதாது பொழியும் மழையைப்போன்று கொடைப் பண்பும் அரசனுக்குரிய அறப்பண்புகளாக புறநானூற்றில் நெறிப்படுத்துகின்றன. அரசன் என்னும் தனிமனிதக் குறியீடு ஒட்டுமொத்த சமூகத்தையும் உள்ளடக்கியுள்ளது என்பதனால் மன்னன் என்னும் அதிகார மையத்திற்கு அறக்கருத்துக்கள் உணர்த்தப்பட்டன. 'பகைவனுக்கருள்வாய், நன்னெஞ்சே பகைவனுக்கருள்வாய்' என்னும் மனித உயர்பண்பை இப்புறநானூற்றுப் பாடல் கொண்டு நிற்பதைப் பார்க்க முடிகின்றது.

நல்லதையே செய்து, நல்லதையே நினைக்கும் உயர்பண்பு, சங்க காலத்திற்குப் பின்பு நிலைத்த பண்பாக உருவெடுத்தது. 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்' என்று கொள்கை வகுத்தது வள்ளுவம் (Subbu Reddyar, 2010). பிறர்மேல் கொள்கின்ற பொறாமை, தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாகக் கொள்ளும் பேராசை, அதிகப்படியான கோபம், தீயசொல் இந்நான்கினையும் தவறுதான் என்று மனம் அறத்தோடு செயல்படுகின்றது என்று இனம் காண முடியும். எனவேதான் வாழ்தலில் உயர்ந்த ஒழுக்கமாக அறம் என்னும் நற்பண்பைக் கருதுகின்றோம். 'தன்னெஞ்சே தன்மைச்சுடும்' என்பதில், தன் நெஞ்சு என்ற தூய களம்தான் நல்ல அறம் விளையும் களமாகக் காணமுடிகின்றது. அறம் தவறும் போது அவன் நெஞ்சமே அவனை வீழ்த்தி விடுகின்றது.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"

என்று சிலப்பதிகாரத்தின் மையப்பகுதியுமே அறத்தை வலியுறுத்துகின்றது. அறத்தை மையப்படுத்தி நடத்தும் அரசியல், பிழை ஏற்படுமாயின் அறமே கூற்றுவனாக அமையும் என்று அறத்தின் வலிமையை எடுத்துக் காட்டுகின்றது (Manickavasagam, 2014).

"வாழ்தல் வேண்டிப்

பொய் கூறேன் மெய் கூறுவல்"

என்று மருதன் இளநாகனார் கூறும் இக்கூற்று வாய்மையைப் பற்றி நிற்கின்றது (Manickavasagam, 2014). வாழ்க்கையின் தேடலுக்காகப் பல வழிகளில் முழுமையை அடைய முடியும் என்று இருந்தாலும் வாய்மையை பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமை சங்ககாலத்திற்கு உண்டு பொய் கூறமாட்டேன் என்று பிரகடனப்படுத்தும் தனிமனித வாழ்நெறி உயர் பண்பாகக் கருதப்படுகின்றது.

## மன்னிக்கும் பண்பு

மனிதப் பண்புகளில் குறிப்பிடத்தகுந்தது, பிறருடன் கலந்து பிறரின் துன்பங்களைத் தன்னுடையவை போல் பாவித்து துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் நேசப்பண்பாகும். முதலில் தன்னை நேசித்தல், தன்னைப் போன்ற இன்னொருவனை நேசித்தல், நம்மைப் போல் உள்ள உயிரினங்களை நேசித்தல் என்ற நிலை வளர்ந்து நேசிப்பு விரிவடையும். தவறு நேர்கின்றபோது அதனைச் சரி செய்ய முயற்சிப்பதும் மனிதனின் உயர்பண்பாகக் கருத முடியும். இந்நிலை தாண்டி தனது வளர்நிலையில் தடை ஏற்படுத்துபவர்களானாலும் அவர்களையும் மன்னிக்கும் உயர்பண்பையே மனித சமூகம் வேண்டி நிற்கின்றது.

முகம் தெரியாத யாரோ ஒருவர் மீதும், இனம் தெரியாத ஏதோ ஓர் உயிரின் மீதும் செலுத்துகின்ற அன்பு, நேசம் இவற்றைக் காட்டிலும் எதிரிகள், பகைவர்களை மன்னிக்கும் செயலே உயர்பண்பாகக் கருதப்படுகின்றது. 'தவறு செய்வது மனித இயல்பு மனப்பக்குவத்தையே வளர்க்கின்றது. மன்னிக்கும் மனப்பக்குவம் எங்கு வலுப்பெறுகின்றதோ அங்கு தவறுகள் குறைந்து நேசிப்பு மேலோங்கும் என்பது திண்ணம்.

**"**இன்னா செய்தார்க்கு இனியவே செய்யாக்கால்

என்ன பயத்ததோ சால்பு"

என்ற வள்ளுவரின் வரி சங்ககாலச் சமுதாயத்தின் உள்ளீடாகத்தான் இருக்க முடியும் (Subbu Reddyar, 2010). பிழை செய்தவர்களை மன்னிக்கும் பண்பாகப் புறநானூற்றில்,

"நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்

நீ பிழைத் தாய் போல் நனி நாணினையே"

என்று தாமப்பல் கண்ணனார் குறிப்பிடுகின்றார் (Manickavasagam, 2014). நீ வெறுக்குமாறு நான் தவறு செய்தேன். சினம் கொள்ளாது தானே தவறு செய்தது போல் நாணம் கொண்டாய் என்னும் உயர்ந்த ஒழுக்க நெறியினாலேயே சங்க இலக்கியச் சான்றோர் சமூகம் இன்றும் போற்றிப் பாடப்படுகின்றன. இங்கு வள்ளுவரின் இன்னா செய்தவருக்குக் கொடுக்கும் தண்டனை அவரை நாணும்படியாக நல்லது செய்தல் வேண்டும் என்ற கூற்று உறுதிப்படுத்தப்படுகின்றது. ஆகையினால் தவறுகள் திருத்தப்பட்டு,

"யானே பிழைத்தனென்: சிறக்க நின் ஆயுள்"

என்ற மனித பண்பு வலுப்பெறுகின்றது (Manickavasagam, 2014). மன்னிக்கும் பண்பான தனிமனிதக் கொள்கைச் சமூக வெளிப்பாடாக் கட்டமைக்கப்பட்டு உயர் பண்பாக மாறிப் பெரும் பயனை உருவாக்கி நிற்கின்றது.

## செய்ந்நன்றியறிதல்

மனிதப் பண்புகளில் சிறந்த மற்றொரு பண்பு நன்றியறிதல் ஆகும். செய்யும் உதவிக்குப் பிரதிபலனாக நன்றி என்ற உணர்வொழுக்கம் ஈடு செய்யப்படுகின்றது. செய்ந்நன்றி எனும் நன்றி மிக உயர்ந்ததாகவே கருதப்படுகின்றது.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

என்பது வள்ளுவரின் வாக்கு. மனித வாழ்வின் அடிப்படையானது உயிர், உயிர்த் தேவையின் மூலதனம் உணவு. குழந்தைக்கு உணவாகத் தாய்ப்பால் கொடுக்கப்படுகின்றது (Subbu Reddyar, 2010). தாய்ப்பால் கொடுக்க முடியாத நிலையில் அந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற உதவுவது பசுவின் பாலாகும். தாயின் நிலையிலிருந்து, தாயைப் போலவே தன்னை பார்க்கும் பசும் தாய்க்கு ஒப்பாகும். ஒரு பெண் சமூகக் கட்டமைப்பில் தான் தாய்மைப் பேற்றை அடைந்துவிட்டோம் என்றெண்ணும் போதெல்லாம் அவளின் மகிழ்ச்சி எல்லையில்லாமல் குதித்தோடும். வயிற்றில் கரு தங்கி பத்து மாதங்கள் சுமந்து பிள்ளைப் பேற்றைக் கொடுக்கும் தாயை உயிர் கொடுக்கும் தெய்வமாகக் கருதுகின்றோம்.

சிந்திக்கும் தன்மை கொண்ட ஆறறிவு படைத்த மனிதக் குழந்தை ஆறாம் அறிவைப் பயன்படுத்தாத சூழலில் அஃறிணையாக அது, இது என்று கையாள்கின்றோம். இந்தக் குழந்தை சமூகக் கட்டமைப்பில் தன்னையும் உட்படுத்திக் கொண்டு வளர, வளரப் பல அனுபவங்களைப் பெறுகின்றது. அக்குழந்தைக்குத் தனது பகுத்தறிவைப் பயன்படுத்தச் சமூகம் அவ்வப்போது வாய்ப்புகளைக் கொடுத்துக்கொண்டே வருகின்றது. சமூகத்தின் வழியாகக் கிடைக்கும் சிறுசிறு அனுபவங்களோடு தனது மூளையின் அணுக்கூறுகளைக் கொண்டு பகுத்தறிவோடு சிந்திக்க நேரிடும் போது இயல்பாக ஏற்படும் தடைகளை நீக்கியும், எதிர்நோக்கியுள்ள இருளை அகற்றி வழிகாட்டவும் தயாராக இருப்பவர் ஆசான் என்னும் அறிஞர். இருளை அகற்றும் கல்வி இல்லாமல் போனால் பார்வை தெளிவாக இருப்பினும் இரண்டு கண்களும் புண் என்றே உணரப்படும் என்பது வள்ளுவரின் கல்விக் கொள்கை. ‘எழுத்தறிவித்தவன் இறைவனாகும்’ என்ற கருத்தும் இந்நிலையிலேயே முழுமைபெற்று நிற்கின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தொடரமைப்பில் உயிர்கொடுக்கும் மாதாவும், அறிவு கொடுக்கும் பிதாவும் இருவராலும் அறிமுகப்படுத்தப்பட்டு வாழ்வொளியைக் கொடுக்கும் குருவும் இறைத்தன்மை கொண்டவர்‌களே. இங்கு உயிர் கொடுக்கும் தாயின் தன்மையைப் பெற்றுள்ள பசுவின் பால்காம்புகளைச் சிதைப்பவர்களுக்கும் கல்வியறிவு கொடுத்து வாழ்வாதாரத்தை ஒளியேற்றி வைக்கும் ஆசானைப் பழித்துத் தீங்குபுரிந்தவர்களுக்கு பெரும்பாவம் வந்து சேரும். இந்தப் பெரும் பாவங்களையும் இறைத்தன்மை கொண்ட மாதா, பிதா, குரு இவர்கள் மாண்பினால் நம்மை விடுவித்துக் கொள்ள வாய்ப்புண்டு. இதற்கும் மேலாக ஒருவர் செய்யும் நன்மைகளை மறப்பவர்களுக்கு மிகப்பெரிய பாவம் வந்து சேரும். இப்பாவத்தை ஏற்படுத்திக்கொள்ளாதவர்களே உயர்வு கொண்ட மனிதர்களாவர். ஏனென்றால் இப்பெரும் பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எவ்வகையான வழிமுறையும் இல்லை என்பது சமூக நியதி. இந்த மனித நியதியைத்தான் புறநானூற்றில்,

“ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்,

மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்

குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்

வழுவாய் மருங்டிகன் கழுவாயும் உள”

என்று ஆலந்தூர்கிழார் தெளிவுபடுத்துகின்றார் (Manickavasagam, 2014). இதன் அடுத்த நிலையாக ஒருவர் செய்த நன்மையை உயிர் உள்ளவரை உணர்தல் அவசியம். இந்த ஒட்டுமொத்த உணர்வுகளின் பிரதிபலிப்புதான் ‘நன்றி’ எனும்சொல். தினையளவு உதவிகள் செய்தாலும் பயன் தெரிந்தவர்கள் பனையளவு கொண்டு மகிழ்வர். பிறர் செய்யும் உதவிகளை, பயன்களை, நன்மைகளை எந்தச்

சூழலிலும் மறத்தல் கூடாது. இங்கு மறத்தல் என்பது கொன்றல் என்று பொருள் கொள்கின்றது. இந்தக் கருத்தை வலியுறுத்திய புறநானூற்றுப் பாடலில்.

"நிலம்புடை பெயர்வது அயினும் ஒருவன்

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்"

என்கின்றது. இந்த உயிருள்ளவரை, உணர்வுள்ளவரை, உலகம் அழிந்து போகும்வரை செய்த உதவி நினைத்துப் பார்க்கப்பட வேண்டும் (Manickavasagam, 2014). உலகமே, கீழ் மேலாக அழியுமாறு ஆயினும் ஒருவரின் நன்மையை மறத்தலாகாது என்ற நன்மையின் உண்மையையும், ஆழத்தையும் கூறி மனிதன் நெறிப்படுத்தப்படுகின்றான்.

## ஈகை மறுத்தல்

ஈகை என்பது பொருள் உள்ளவன் பொருள் இல்லாதவனுக்குக் கொடுக்கும் செயல் ஆகும்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்ற வள்ளுவரின் கருத்து (Subbu Reddyar, 2010). ஈகை வாழ்க்கையில் பெறும் இடத்தை வரையறுத்து நிற்கின்றது. இந்த ஈகை பிரதிபலன் பார்க்கும் தன்மையைக் கொண்டது, கடன் என்றே சொல்லப்படும். வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை என்கின்றது வள்ளுவம். வறியவரின் முகம் கண்டு ஈதல் வேண்டும். இன்முகம் காணும் அளவே ஈகையின் அளவுகோலாக இருக்க முடியும். இந்த ஈகை புறநாநூற்றில் வாழ்க்கைப் பண்பாகவே கருதப்படுகின்றது. தன்னுடைய வறுமையை தீர்த்துக்கொள்ளப் பொருள் இருக்கும் புரவலர்களிடம் பொருள் பெற்று உயிர்வாழ்தல் இயல்பான செயலாகவே அமைகின்றது. இரவலர்களுக்குப் பொருள் கொடுத்துத் தானும் இரப்பவராகிவிட்டால் இங்கே ஈகை என்ற நல்லறமே கெட்டுப் போய்விடுகின்றது. இப்போது இரந்து வாழும் தன்மை உடைத்தெறியப்படுகின்றது இக்கருத்தை புறநானூற்றில். என் கிழிந்த ஆடையை அகற்றிப் புத்தாடை அணிவித்து, இவன் இரங்கத் தக்கவன் என்றெண்ணி, கள்ளின் தெளிவுடன் இறைச்சி தந்து பசிபோக்கி, அவ்விரவிலேயே வேண்டுவன யாவும் கொடுத்த புரவலன். வறுமையாகிய கடலைக் கடக்கும் தெப்பமாக இருப்பதால் அந்நாளிலிருந்து பிறர்பாற் சென்று இரப்பதைத் தவிர்த்தேன் எனவே,

"உளத்தின் அளக்கும் மிளிர்ந்த தகையேல்

நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனென் ஆகி

ஒருநாள், இரவலர் வரையா வள்ளியோர் கடைத்தலை

ஞாங்கர் நெடுமொழி பயிற்றித்

தோன்றல் செல்லாது, என் சிறு கிணைக் குரலே"

என்ற ஈகை மறுப்பு செய்கின்றார் நன்னாகனார் (Manickavasagam, 2014). இந்நிலையில் தான் ஈதல் என்பது இழிந்த செயல் என்னும் கருத்தோட்டம் உருவாகின்றது.

"ஈனெ இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று"

என்று கருத்து ரீதியாகப் புதிய வடிவத்தைப் பெறுகிறது ஈகை (Manickavasagam, 2014). இதே கருத்தை வலியுறுத்தியே வள்ளுவர்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான்"

என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றார் (Subbu Reddyar, 2010). கொடுக்கும் தன்மையில் முறையறிந்து கொடுத்தல் அவசியம். பசியென்று வந்தவனுக்கு யானையைப் பரிசாகக் கொடுப்பதும் காலம் தாழ்த்திப் பொருள் கொடுப்பதும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்ததன்று அதன்எதிர்

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்ற கருத்தோட்டம் நிலவிய போதுதான் ஔவை தனக்குப் பொருள் கொடுக்காமல் காலம் தாழ்த்திய போது 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்று காலம் தாழ்த்திக் கொடுத்தப் பொருள் பெறாமல் 'கொள்ளேன்' என்று சொல்லும் பண்பும் ஔவை போன்ற புலவர்களிடம் இருந்தன (Manickavasagam, 2014).

'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்ற பழமொழியைப் பாத்திரம் அறிந்து பொருள் கொடுக்க வேண்டும் என்று தவறாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. பாத்திரம், பாடுவோரின் திறமைக்கேற்ப, பாடலின் தன்மைக்கேற்ப பொருள் கொடுத்தலே ஈகையின் தன்மையாகும். வறுமையை உண்டாக்குவதாலும், பொருள், புகழ் போற்றிப் பொருள் பெறுவதாலும் ஈகை இழிந்ததாகக் கருதப்பட்டது. எனவே தான் 'ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே' என்று தொல்காப்பியம் இலக்கணம் வகுக்கின்றது. இழிந்தோன் கூற்றாகிய ஈதல் என்பது தனிமனித ஒழுக்க விதியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## முடிவுரை

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை சமூக கட்டமைப்பை மேம்படுத்த சமுதாயச் சிந்தனைகள் போற்றப்படுகின்றன. சமூகத்தளத்தில் சமூக நலம், வேண்டி சகிப்புத்தன்மை வளர்ந்து, மனிதனை நேசிப்பை வளர்க்க மனித உயர்பண்பு நெறிகள் வாழ்வில் விதைத்து முறைப்படுத்தப்பட்டன, புறநானூறு தமிழகப் பண்பாட்டின் அடையாளம் என்பதற்கும் சமுதாயத்தில் அறக்கோட்பாடுகளை கொண்டு மனிதர்களை மேம்படுத்தியது என்பதை திருக்குறள் மூலமும் விளக்கப்பட்டுள்ளன.

## References

Manickavasagam, G. (2010) Purananuru, Uma pathippagam, Chennai, India.

Manickavasagam, G. (2019) Silapathiagram, Uma pathippagam, Chennai, India.

Subbu Reddyar, N. (2010) Thirukkural Thelivurai, Sarvodhaya Illakkiya Pannai, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License